# சேலம் மாநகராட்சி

**2024ஆம் ஆண்டு ஜூலை மாதம் 26ஆம் தேதி வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு சேலம் மாநகராட்சியின் மாமன்றக்கூடத்தில் தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் விதிகள் 2023, அத்தியாயம் 4, பகுதி I-ன் கீழ் சேலம் மாநகராட்சியின் இயல்புக்கூட்டம் நடைபெறும்.**

---

## பொருள்கள்

**1)** மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தமிழ் நாடு சட்டமன்ற அறிவிப்பு விதி எண்.110ன் கீழ் அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்.22039/2023/SS-2, நாள்.28.06.2023-ம் தேதி கடிதத்தின்படி, 2023-2024 ஆம் நிதியாண்டிற்கான இலக்கினை நிறைவு செய்ய 6-வது மாநில நிதிக்குழு மான்யம், S.F.C. நிதி தொகையின் கீழ் சேலம் மாநகராட்சி பகுதியில் பழுதடைந்துள்ள சாலைகளை மேம்படுத்தும் பணிகளை மேற்கொள்ள தொகை ரூ.15.60 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு உத்தரவிடப்பட்டுள்ளது.

சேலம் மாநகராட்சி பகுதியில் பழுதடைந்துள்ள (Damaged Roads) சாலைகள் 290 எண்ணிக்கையில் 19 சிப்பங்களுக்கு 33.234 கிலோ மீட்டர் நீளத்திற்கு அரசு மான்யம் ரூ.1560.00 இலட்சமும், மாநகராட்சி பொது நிதியின் கீழ் ரூ.8.55- இலட்சம் சேர்த்து மொத்த மதிப்பீடு தொகை ரூ.1568.55 இலட்சத்திற்கு பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டது.

அதனை தொடர்ந்த சேலம் மாநகராட்சி அம்மாபேட்டை வார்டு அலுவலகம், கோட்டம் எண் 36 மற்றும் 41 க்கு உட்பட்ட பகுதியில் பழுதடைந்த சாலைகளை மறு சீரமைக்கும் பணி, சிப்பம் 14 க்கு மதிப்பீட்டு தொகை ரூ 97.82 இலட்சத்திற்கு பணி மேற்கொள்ள 07-08-23 தேதியில் ஒப்பந்தபுள்ளி கோரியதில் மாநகராட்சி ஒப்பந்ததாரர் திரு.கே.வெங்கடாஜலம் அவர்களுக்கு 0.02% குறைவு என்ற விகிதாசாரத்தில் 25.08.2023 தேதியில் பணி ஆணை வழங்கப்பட்டு தற்போது பணி முடிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி...

மேற்படி பணி நடைபெறும் பொழுது, மாநகராட்சி ஆணையாளர் மற்றும் மாநகர பொறியாளர் நேரில் ஆய்வு செய்து வழங்கிய அறிவுரைகளின்படி மற்றும் தளஅளவுகளின் மாற்றங்களின் காரணமாக சில இனங்களில் அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டில் அளவுகளை விட கூடுதலாக பணி மேற்கொள்ளவேண்டியுள்ளது.

மதிப்பீட்டில் வழிவகை செய்யப்பட்டுள்ள இனங்களில் மேற்கொள்ள வேண்டிய கூடுதல் அளவு பணிகளும், அதற்கான கூடுதல் செலவுத் தொகையும் பின்வரும் அட்டவணையில் பட்டியலிடப்பட்டுள்ளது.

| வ. எண். | இனங்கள் | மதிப்பீட்டில் உள்ள அளவு | தொகை ரூபாயில் | செய்யப்பட வேண்டிய அளவு | தொகை ரூபாயில் | கூடுதலாகும் தொகை ரூபாயில் |
|---|---|---|---|---|---|---|
| 1 | CC 1:1.5:3mix, Using 20mm size ISS gauge HBBG metal etc, complete. | 261.00 | 1816907.13 | 269.50 | 1875989.50 | 59082.37 |
| 2 | Providing and laying ,Spreading and Compacting WMM etc, complete. | 650.00 | 1209786.50 | 736.71 | 1371172.02 | 161385.52 |
| 3 | Providing and laying Prime coat of 7 kgs/10 sq.m etc, complete. | 5110.00 | 386469.30 | 5402.73 | 407906.12 | 21436.82 |
| 4 | Providing and laying Tack coat of 2.5 kgs/10 sq.m etc, complete. | 5110.00 | 83497.40 | 5402.73 | 88064.50 | 4567.10 |
| 5 | Providing and laying 50mm Consolidated thick Dense Bitumenous Macadam etc, complete. | 256.00 | 2415872.00 | 270.14 | 2549311.18 | 133439.18 |
| 6 | Providing and laying of 30mm thick Bitumenous Concrete etc, complete. | 167.00 | 1586326.32 | 173.29 | 1645908.42 | 59582.10 |
| | | | **7498858.65** | | **7938351.73** | **439493.08** |

மேற்கண்டவாறு அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டில் வழி வகை செய்யப்பட்ட இனங்களில் இடத்தின் தன்மைக்கேற்ப ஏற்பட்ட மாறுபாடுகளின் காரணமாக மேற்கொள்ளப்பட வேண்டிய கூடுதல் அளவு பணிகளின் காரணமாக கூடுதல் செலவுத்தொகை ரூ.**4,39,493.08** என கணக்கிடப்பட்டுள்ளது. இதே மதிப்பீட்டிற்குள் செய்து முடித்ததற்கும் பில்பட்டியல் வழங்கவும் பின்னேற்பு வழங்கி அனுமதி வழங்கலாம்..

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MC4) துறை, அரசாணை (Ms) எண்.158, நாள்.02.11.2022 மற்றும் 2023ம் ஆண்டு தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்பு விதி 248 Table- II–ன்படி ஆணையரின் அதிகாரவரம்பிற்கு உட்பட்டு இப்பணிக்காக எடுக்கப்பட்ட அனைத்து நடவடிக்கைகளுக்கும் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:–</u>

மன்றம் பதிவு செய்யலாம்

**(இ4/ம.எண்.225/ R/2023–2024)**

தீர்மானம். பதிவு செய்யப்பட்டது.

**2)** சேலம் மாநகராட்சி மைய அலுவலகம் மற்றும் நான்கு வார்டு அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலக உதவியாளர்களுக்கு 2024-2025 ஆம் ஆண்டிற்கான சீருடைகள் வழங்கும் பொருட்டு 26.06.2024 ந் தேதி தி தமிழ்நாடு ஹேண்ட்லூம் கோ-ஆப்ரேடிவ் சொசைட்டி லிமிடெட் சேலம் நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட கிரிடிட் பில் தொகை ரூ.45,943/-ஐ வழங்குவது குறித்தும் மற்றும் அரசாணை எண்.306 நிதி (ஊதியம்) துறை நாள்.13.10.2017ன்படி சீருடைகளுக்கான தையற்கூலி 24 அலுவலக உதவியாளர்களுக்கு வழங்குவது குறித்து அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ. எ ண். | விபரம் | பணியாளர் எண்ணிக் கை | அளவுகள் (மீ) | தொகை ரூ. | GST 5% (ரூ.) | நிகர மதிப்பு (ரூ.) |
|---|---|---|---|---|---|---|
| 1 | ஆண் பணியாளர்கள் | 23 | வெள்ளை அரைக்கை சட்டை 103.50 | 27427.50 | 1371.37 | 28798.87 |
| | | | வெள்ளை முழுக்கால் பேண்ட் (57.50) | 15237.50 | 761.87 | 15999.37 |
| 2. | பெண் பணியாளர்கள் | 1 | நீல நிறம் பாலலிஸ்டர் புடவை -2 | 920.00 | 46.00 | 966.00 |
| | | | நீல நிறம் ஜாக்கெட் -2 | 169.60 | 8.48 | 178.08 |
| | **மொத்தம்** | | | **43,754.60** | **2,187.73** | **45,942.33** |
| | **Round off** | | | | | **45,943.00** |
| | தையற்கூலி அலுவலக ஆண் பணியாளர்கள் 23x400 வீதம் x2 செட்<br>பெண் பணியாளர்கள் ஜாக்கெட் -2 | 23x400x2= 18400/-<br>1x40x2= 80/- | | | | **18480.00** |
| | **மொத்தம்** | | | | | **18480.00** |

<u>அலுவலகக்குறிப்பு:-</u>

1. தி தமிழ்நாடு ஹேண்ட்லூம் வீவர்ஸ் கோ- ஆபரேடிவ் சொசைட்டி லிமிடெட் சேலம் நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட கிரிடிட்பில் தொகை ரூ.45,943/-ஐ வழங்குவதற்கு அனுமதிக்கலாம்.
2. சீருடைக்கான தையற்கூலி தலா ரூ.400/- வீதம் இரண்டு செட் துணிக்கு தொகை ரூ.18400/- ஆண் அலுவலக உதவியாளர்கள் 23 நபர்களுக்கும், பெண் அலுவலக பணியாளர் 1 நபருக்கு ரூ.40/-வீதம் இரண்டு செட் ஜாக்கெட்க்கு ரூ.80/-ஐ வழங்குவதற்கு அனுமதிக்கலாம்.
3. மேற்காணும் செலவினத் தொகையினை பொது நிதியிலிருந்து வழங்குவதற்கு அனுமதிக்கலாம்.

(டி9/3959/2023)

தீர்மானம். அலுவலகக்குறிப்பு 1, 2, 3 அனுமதிக்கப்பட்டது.

**3)** சேலம் மாநகராட்சி 2018-2019ம் ஆண்டு மூலதன மான்ய நிதியின் கீழ், சூரமங்கலம் மண்டலம் எண்–1, அஸ்தம்பட்டி மண்டலம் எண்–2, அம்மாபேட்டை மண்டலம் எண்–3, கொண்டலாம்பட்டி மண்டலம் எண்–4 ஆகிய பகுதிகளில் உள்ள நீர்தேக்க தொட்டிகளில் நீர் அளவு மற்றும் அழுத்தம் ஆகியவற்றை கண்டறிய IOT நெட்வொர்க் உள்கட்டமைப்பை நிறுவுதல் மற்றும் செயல்படுத்தும் பணியை மதிப்பீடு தொகை ரூ.**4.29** கோடியில் மேற்கொள்ள, **ஆணையாளர் அவர்களின் 11.03,2024ம் தேதிய அனுமதியின் பேரில் இரண்டாவது முறையாக 02.04.2024ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது.**

மேற்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பாராளுமன்ற தேர்தல்–2024 தேர்தல் நடத்தை விதிகள் நடைமுறையில் இருந்ததால், ஆணையாளர் அவர்களின் அனுமதியின்படி 10.06.2024 அன்று தொழில்நுட்ப கூர்ந்தாய்வு குழு கூட்டம் நடைபெற்று அறிக்கை வழங்கியுள்ளனர். மேற்தெரிவித்துள்ள அறிக்கையின்படி, ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்ட ஒப்பந்ததாரர்கள் விபரம்:

1) Thiru.Salieabs Solutions LLP, Salem.
2) Sriram electrical, Kovilpatti,

மேற்காணும் 2 ஒப்பந்தப்புள்ளிகளில் கூர்ந்தாய்வு குழுவின் Eligibility Critieria அறிக்கையில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் முழுமையான தொழில்நுட்ப தகுதி உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. .

மேலும், இப்பணிக்காக 14.06.2024 அன்று விலைதிறப்பு செய்யப்பட்ட தகுதிவாய்ந்த இரு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் விபரம் பின்வருமாறு:

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை .ரூ. | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் | வைப்புத்தொகை செலுத்திய விபரம் |
|---|---|---|---|---|
| 1. | **M/s. Salieabs Solutions LLP, Salem (L 1)** | **ரூ.3,46,35,270/–** | **0.60 % மதிப்பீட்டை விட குறைவு** | eProcurement Ref. No.5344601051684, Rs.4,29,000/-. SBI Bank. date.10.06.2024. |
| 2. | M/s.Sriram Electricals, Kovilpatti, (L2) | **ரூ.3,78,61,001/–** | **8.66 % மதிப்பீட்டை விட அதிகம்** | eProcurement Ref. No.5344601052396, Rs.4,29,000/-. SBI Bank. date.10.06.2024. |

எனவே, மேற்காணும் **M/s. Salieabs Solutions LLP, Salem, (L1)** என்ற ஒப்பந்ததாரர் ரூ.3,46,35,270/– என மதிப்பீட்டை விட 0.60% குறைவாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியினை ஏற்றுக்கொண்டு பணி ஆணை வழங்கி மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

மன்றம் பதிவு செய்யலாம்.

**(இ2/ 14447 /2017)**

தீர்மானம். பதிவு செய்யப்பட்டது.

4) சேலம் மாநகராட்சி தனிக்குடிநீர் திட்டத்திற்குட்பட்ட கோம்புரான்காடு நீர் உந்து நிலையத்தில் பொருத்தப்பட்டுள்ள ஒலி மீட்பு அளவுமானி (Ultrasonic Flow Meter) அருகிலுள்ள மோட்டார்களின் அதிர்வின் காரணமாக சரியான அளவுகளை காட்டாததால் அதனை மாற்றி புதியதாக மின் காந்த அளவுமானி (Electro Magnetice Flow Meter) பொருத்தும் பணியினை ரூ.20.00/– இலட்சத்தில் மேற்கொள்ள தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி சட்டம் பிரிவு எண்–57(7)ன் கீழ் 07.03.2024ம் தேதியில் ஆணையாளர் அவர்களின் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

மேற்படி பணிக்கு 13.03.2024 அன்று பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் விலைப்புள்ளிதாரர் **M/s. Swethalakshmi Engineering, Salem.** நிறுவனத்தாரிடமிருந்து ரூ.16,75,461/– என மதிப்பீட்டை விட 0.04% குறைவாக வரப்பெற்ற குறைந்த விலைப்புள்ளியை ஏற்றுக்கொண்டு 14.03.2024ஆம் தேதியில் பணி ஆணை வழங்கப்பட்டது.

பொது மக்களுக்கு வழங்கப்படும் குடிநீர் என்பதனால் அவசரம் மற்றும் அவசியம் கருதி, பணி ஆணை வழங்கி பணியை நிறைவேற்ற எடுக்கப்பட்ட நடவடிக்கையை மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:–</u>**

1. பதிவு செய்யலாம்.
2. இதற்கான செலவினத்தை 2023–2024ஆம் ஆண்டு குடிநீர் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளலாம்.

**(இ2/ம.எண்,19/குநீ/2023–24)**

தீர்மானம். அலுவலகக்குறிப்பு 1,2 அனுமதிக்கப்பட்டது.

5) சேலம் மாநகராட்சி அஸ்தம்பட்டி மண்டலம் கோட்டம் எண்.15 சீரங்கபாளையம் 15 இலட்சம் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்தேக்க தொட்டியில் இருந்து வெளியே செல்லும் பகிர்மான குழாயில் பொருத்தப்பட்டுள்ள 300mm விட்டமுள்ள CI - Sluice Valve பழுதாகியுள்ளதை மாற்றி 300mm விட்டமுள்ள DI - Sluice Valve மாற்றி அமைக்கும் பணியினை ரூ.3.50/–இலட்சத்தில் மேற்கொள்ள தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி சட்டம் பிரிவு எண்–57(7)ன் கீழ் 04.04.2024ம் தேதியில் ஆணையாளர் அவர்களின் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

தொடர்ச்சி,,,

மேற்படி பணிக்கு 15.05.2024 அன்று பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் விலைப்புள்ளிதாரர் M/s. Swethalakshmi Engineering, Salem. நிறுவனத்தாரிடமிருந்து ரூ.2,92,653/- என மதிப்பீட்டை விட 0.13% குறைவாக வரப்பெற்ற குறைந்த விலைப்புள்ளியை ஏற்றுக்கொண்டு 17.05.2024ஆம் தேதியில் பணி ஆணை வழங்கப்பட்டது.

பொது மக்களுக்கு வழங்கப்படும் குடிநீர் என்பதனால் அவசரம் மற்றும் அவசியம் கருதி, பணி ஆணை வழங்கி பணியை நிறைவேற்ற எடுக்கப்பட்ட நடவடிக்கையை மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:-</u>

1. பதிவு செய்யலாம்.
2. இதற்கான செலவினத்தை 2023-2024ஆம் ஆண்டு குடிநீர் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளலாம்.

**(இ2/ம.எண்,70/குநீ/2023-24)**

தீர்மானம். அலுவலகக்குறிப்பு 1,2 அனுமதிக்கப்பட்டது.

**6)** அம்மாபேட்டை மண்டலம் கோட்டம் எண்.35 ஆதி செல்வகணபதி தெருவில் உள்ள மேல்நிலை நீர்தேக்க தொட்டி வளாகத்தின் நீர் உந்து நிலையத்தில் உள்ள 180HP-No.2, 40HP-No.2 மோட்டாருக்கான பம்ப், பேரிங் பழுதாகியுள்ளதை சரி செய்தல், ஒரு லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட சம்பிலிருந்து செல்லும் 20HP நீர்மூழ்கி மோட்டார் ஸ்டாட்டருக்கு தேவையான கேபிள் மற்றும் பேனல் போர்டு இணைக்கும் பணி மற்றும் 20 KVA Capacitore-2 Nos பழுதடைந்துள்ளதை சரி செய்யும் பணியினை ரூ.6.30/- இலட்சத்தில் மேற்கொள்ள தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி சட்டம் பிரிவு எண்-57(7)ன் கீழ் 15.03.2024ம் தேதியில் ஆணையாளர் அவர்களின் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

மேற்படி பணிக்கு 20.03.2024 அன்று பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் விலைப்புள்ளிதாரர் M/s. Swethalakshmi Engineering, Salem. நிறுவனத்தாரிடமிருந்து ரூ.5,27,064/- என மதிப்பீட்டை விட 0.12% குறைவாக வரப்பெற்ற குறைந்த விலைப்புள்ளியை ஏற்றுக்கொண்டு 22.03.2024ஆம் தேதியில் பணி ஆணை வழங்கப்பட்டது.

தொடர்ச்சி..

பொது மக்களுக்கு வழங்கப்படும் குடிநீர் என்பதனால் அவசரம் மற்றும் அவசியம் கருதி, பணி ஆணை வழங்கி பணியை நிறைவேற்ற எடுக்கப்பட்ட நடவடிக்கையை மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**

1. பதிவு செய்யலாம்.
2. இதற்கான செலவினத்தை 2023-2024ஆம் ஆண்டு குடிநீர் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளலாம்.

**(இ2/ம.எண்,75/குநீ/2023-24)**

தீர்மானம். அலுவலகக்குறிப்பு 1,2 அனுமதிக்கப்பட்டது.

**7)** சேலம் மாநகராட்சியின் மாமாங்கம், அரியகவுண்டம்பட்டி மற்றும் வெங்கடப்பன் ரோடு ஆகிய மூன்று இடங்களில் அமைக்கப்பட்டுள்ள குளோரின் பிளாண்டுகளுக்கு தேவையான சோடியம் ஹைபோ குளோரைடு திரவம் **205** மெ.டன் வாங்கி விநியோகம் செய்யும் பணியினை ரூ.**20.00/-**இலட்சத்தில் மேற்கொள்ள **தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி சட்டம் பிரிவு எண்-57(7)ன் கீழ் 24.05.2024ம் தேதியில்** ஆணையாளர் **அவர்களின் அனுமதி** பெற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

மேற்படி பணிக்கு 04.06.2024 அன்று பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் விலைப்புள்ளிதாரர் M/s. Swethalakshmi Engineering, Salem. நிறுவனத்தாரிடமிருந்து ரூ.16,89,200/- என மதிப்பீட்டை விட 0.12% குறைவாக வரப்பெற்ற குறைந்த விலைப்புள்ளியை ஏற்றுக்கொண்டு 06.06.2024ஆம் தேதியில் பணி ஆணை வழங்கப்பட்டது.

பொது மக்களுக்கு வழங்கப்படும் குடிநீர் என்பதனால் அவசரம் மற்றும் அவசியம் கருதி, பணி ஆணை வழங்கி பணியை நிறைவேற்ற எடுக்கப்பட்ட நடவடிக்கையை மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**

1. பதிவு செய்யலாம்.
2. இதற்கான செலவினத்தை 2023-2024ஆம் ஆண்டு குடிநீர் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளலாம்.

**(இ2/ம.எண்,81/குநீ/2023-24)**

தீர்மானம். அலுவலகக்குறிப்பு 1,2 அனுமதிக்கப்பட்டது.

**8)** நகராட்சி நிர்வாக இயக்குநரக கடிதம் ந.க.எண்.2459/2024/SS1, நாள்.01.02.2024 ஆம் தேதி கடிதத்தின்படி 2024–2025ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்புற சாலை உட்கட்டமைப்பு திட்ட நிதியின் கீழ் (TURIP) சேலம் மாநகராட்சி பகுதியில் பாதாள சாக்கடை திட்டம், தனிக்குடிநீர் திட்ட குழாய், இயற்கை இடர்பாடுகளினால் சேதமடைந்த சாலைகளை மறுசீரமைக்கும் பணிகள் மேற்கொள்ள 18 சிப்பங்களுக்கு 384 எண்ணிக்கையிலான சாலை பணிகளுக்கு 55.563 கி.மீ. நீளத்திற்கு, மொத்த மதிப்பீடு தொகை ரூ.2349.01 இலட்சத்திற்கு, 2023–2024ம் ஆண்டு செந்தார விலை விகிதப் பட்டியல்படி 01.02.2024 ஆம் தேதி நகராட்சி நிர்வாக இயக்குநரகம் நிர்வாக அனுமதி வழங்கி உத்தரவிடப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து 05.02.2024ம் தேதி தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டது.

நகராட்சி நிர்வாக இயக்குநரக கடிதம் ந.க.எண்.2459/2024/SS1, நாள்.02.02.2024 ஆம் தேதி கடிதத்தின்படி மேற்படி பணிகளுக்கு நகராட்சி நிர்வாக இயக்குநரகத்தின் மூலம் 23.02.2024ம் தேதிக்கு 18 சிப்பங்களுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பெறப்பட்டது

அதனை தொடர்ந்து சேலம் மாநகராட்சி அஸ்தம்பட்டி வார்டு அலுவலகம் கோட்டம் எண். 14,17க்கு சிப்பம் எண். 6–க்கு உட்பட்ட பகுதியில் பழுதடைந்த சாலைகளை மறுசீரமைக்கும் பணி மேற்கொள்ளுதல் பணிக்கு தொகை ரூ.139.00 இலட்சம் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு 23.06.2023ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு மதிப்பீட்டு தொகையை விட 0.12% சதவீதம் குறைவாக ரூ. 1,15,96,121.00/– ஒப்பந்தப்புள்ளி அளித்த திருவாளர்கள். ஸ்ரீ வைத்தீஸ்வரா & கோ நிறுவனத்தார் அவர்களுக்கு 14.03.2024 அன்று பணி உத்திரவு வழங்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது.

மேற்படி பணி நடைபெறும் பொழுது ஏற்பட்ட தளஅளவுகளின் மாற்றங்களின் காரணமாகவும், சில இனங்கள் மதிப்பீட்டில் வழிவகை செய்யப்படாத இனங்களாகவும் பணி மேற்கொள்ளவேண்டியுள்ளது.

மதிப்பீட்டில் வகை செய்யப்படாத புதிய இனங்கள் இப்பணியில் உட்புகுத்த வேண்டிய அளவும், அதற்கான செலவுத் தொகையும் பின்வரும் அட்டவணையில் பட்டியலிடப்பட்டுள்ளது.

| வ. எண். | கூடுதலாகும் இனங்கள் | செய்யப்பட வேண்டிய அளவு | தொகை ரூபாயில் |
|---|---|---|---|
| 1. | Providing and laying, spreading and compacting graded stone aggregate to **Wet mix macadam (WMM)** | 180.30 M3 | 335172.29 |
| | **Total** | | **3,35,172.29** |

மதிப்பீட்டில் வகை செய்யப்பட்டுள்ள இனங்களில் மேற்கொள்ள வேண்டிய கூடுதல் அளவு பணிகளும், அதற்கான கூடுதல் செலவுத் தொகையும் பின்வரும் அட்டவணையில் பட்டியலிடப்பட்டுள்ளது.

தொடர்ச்சி...

| வ. எண். | இனங்கள் | மதிப்பீட்டில் உள்ள அளவு | தொகை ரூபாயில் | செய்யப்பட வேண்டிய அளவு | தொகை ரூபாயில் | கூடுதலாகும் தொகை ரூபாயில் |
|---|---|---|---|---|---|---|
| 1. | Milling the existing B.T surface to 5 to 7 cm depth using milling machine, | 22682.70 m2 | 1960239.00 | 23160.00 m2 | 1991760.00 | 31521.00 |
| 2. | Providing and laying 50mm consolidated thick Dense Bituminous Macadam | 80.00 m3 | 754960.00 | 83.02 m3 | 783459.74 | 28499.74 |
| | **Total** | | **2715199.00** | | **2775219.74** | **60,020.74** |

மேற்கண்டவாறு மதிப்பீட்டில் வகை செய்யப்படாத புதிய இனங்களை இப்பணியில் உட்புகுத்துவதன் காரணமாகவும் கூடுதலாக ரூ.3,35,172.29/- செலவாகும் எனவும், அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டில் வகை செய்யப்பட்ட இனங்களில் இடத்தின் தன்மைக்கேற்ப ஏற்பட்ட மாறுபாடுகளின் காரணமாக மேற்கொள்ளப்பட வேண்டிய கூடுதல் அளவு பணிகளின் காரணமாக கூடுதல் செலவுத்தொகை ரூ.60,020.74/– எனவும் ஆகமொத்தம் ரூ.3,95,193.03/–என கணக்கிடப்பட்டுள்ளது. அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டில் உள்ள பிற இனங்கள் தள அமைப்பின்படி செயல்படுத்தும் அளவுகளின் காரணமாக ஏற்படும் சேமிப்புத் தொகையிலிருந்து இக்கூடுதல் செலவினை சரி செய்ய வகை இருப்பதால் ஒப்பந்த தொகைக்கு மிகாமல் இப்பணியினை மேற்கண்ட அவசியமான மாற்றங்களுடன் செய்து முடிக்க இயலும்.

The excess of expenditure to be incurred in certain sanction items are proposed to be met from the savings quantity of other items in this estimate.

அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டில் உள்ள ஒப்பந்த தொகைக்கு மிகாமல் மதிப்பீட்டில் வகை செய்யப்படாத புதிய இனங்கள் உட்புகுத்தவும், மதிப்பீட்டில் வகை செய்யப்பட்டுள்ள இனங்களில் கூடுதல் அளவுகள் மேற்கொள்ளவும் இப்பணியினை இதே ஒப்பந்ததாரரை கொண்டு ஒப்பந்த விலை விகிதத்திற்கு செய்து முடிக்க அனுமதி வேண்டியும், இப்பணி குறிப்பிட்ட கால அளவிற்குள் முடிக்க வேண்டிய அவசியம் மற்றும் அவசரம் கருதி பணிகள் முடிக்கப்பட்டது.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MC4) துறை, அரசாணை (Ms) எண்.158, நாள்.02.11.2022 மற்றும் 2023ம் ஆண்டு தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்பு விதி 248 Table- II இன்படி இப்பணிக்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளுக்கு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு :–</u>

மன்றம் பதிவு செய்யலாம்.

**(இ4/ம.எண்.195/R/2023–2024)**

தீர்மானம். பதிவு செய்யப்பட்டது.

9) <u>திருமதி மா.சாரதாதேவி, துணைமேயர் அவர்களின் தீர்மானம்</u>

சேலம் மாநகராட்சி அஸ்தம்பட்டி வார்டு அலுவலகத்திற்குட்பட்ட கோட்டம் எண்.7ல் பிரகாசம் நகர் குறுக்கு தெருவிற்கு தார்சாலை வசதியில்லாமல் மக்கள் மிகவும் சிரமப்படுகின்றனர். எனவே, பிரகாசம் நகர் குறுக்கு தெருவிற்கு தார்சாலை வசதி செய்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

10) <u>திருமதி மா.சாரதாதேவி, துணைமேயர் அவர்களின் தீர்மானம்</u>

சேலம் மாநகராட்சி அஸ்தம்பட்டி வார்டு அலுவலகத்திற்குட்பட்ட கோட்டம் எண்.7ல் சிண்டிகேட் பேங்க் காலனி 3வது தெரு (ஏழுமலை தெரு) தார்சாலை, சாக்கடை வசதி, வடிகால் வசதி செய்து தர சேலம் மாநகராட்சியில் 2 ஆண்டுகளுக்கு முன் பூமிபூஜை போடப்பட்டது. ஆனால் இதுவரை எந்த வேலையும் நடைபெறவில்லை. எனவே பொதுமக்கள் கேட்டதற்கிணங்க தார்சாலை வசதி, சாக்கடை வசதி இல்லாமல் மக்கள் மிகவும் சிரமப்படுகின்றனர். எனவே, சிண்டிகேட் பேங்க் காலனி 3வது தெருவிற்கு (ஏழுமலை தெரு) தார்சாலை வசதி மற்றும் சாக்கடை வசதி செய்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

11) சேலம் மாநகர காவல் ஆணையர் அவர்கள் சேலம் நகர புதிய பஸ் நிலையம் அமைந்துள்ள பள்ளப்பட்டி டவுன் கிராமம் பழைய சர்வே எண். 163-க்கு வார்டு - L. பிளாக் 10, T.S.No.1 பரப்பளவு 9.96.00 ஹெக்டர் நிலங்களில் மாநகராட்சிக்கு அரசாணை எண். 299, வருவாய்த் துறை நாள்.17.3.1997 அரசாணையில் உரிமை மாற்றம் வருவாய் நிலை ஆணை எண்.23-ன் கீழ் ஒப்படைக்கப்பட்ட 22.05 ஏக்கர் நிலத்தில் பள்ளப்பட்டி காவல் நிலையம் அமைக்க குறைந்த பட்சம் 1200 ச.மீட்டர் நிலங்களை காவல் துறைக்கு ஒதுக்கீடு செய்து வழங்கும்படி கோரப்பட்டுள்ளது.

மேற்படி பள்ளப்பட்டி காவல் நிலையம், புதிய பஸ் நிலையத்தில் வணிக பயன்பாட்டிற்காக கட்டப்பட்ட வளாகத்தில் 2 கடைகளுக்கான இடத்தில் இயங்கி வருகிறது, ஒரு நிரந்தர கட்டிடம், மாநகர புதிய பஸ் நிலையத்தில் ஏற்படுத்தி அரசு நிலமாக ஒதுக்கீடு கோரப்பட்டுள்ளது.

புதிய பஸ் நிலையத்தின் வடமேற்கு மூலையில் அமைந்துள்ள பூமாலை வணிக வளாக கட்டிடத்தின் கிழுபுறம் உள்ள காலி நிலப்பரப்பினை காவல் துறைக்கு ஒதுக்கீடு செய்து RSO23-ன் கீழ் உத்திரவிட கோரி மாநகர காவல் ஆணையர் கேட்டுள்ளார்.

மாநகர காவல் ஆணையர், நில ஒதுக்கீடு கோரியுள்ள நிலத்தினை மாநகராட்சி ஆணையாளர், சம்மந்தப்பட்ட திட்ட செயற்பொறியாளர், சூரமங்கலம் உதவி ஆணையர் மற்றும் பள்ளப்பட்டி காவல் ஆய்வாளர் ஆகியோருடன் 29.06.2024 அன்று புலத்தணிக்கை செய்துள்ளார், நில ஒதுக்கீடு கோரும் நிலத்தில் பஸ் நிலையத்திற்காக ஒரு ஜெனரேட்டர் நிறுவப்பட்டு இயங்கி வருகிறது. மேற்படி ஜெனரேட்டரை பூமாலை வணிக வளாகத்திற்கு தென்புறம் காலி இடத்தில் மாற்றி அமைக்கும் பட்சத்தில் 0.19 ஏக்கர் அல்லது 8272 சதுர அடி நிலம் கண்டறியப்பட்டுள்ளது. மேற்படி நிலத்தின் காவல் துறைக்கு நில ஒதுக்கீடு செய்யும் நிலையில் மாநகராட்சி நிறுவியுள்ள ஜெனரேட்டரை வேறு பகுதிக்கு இடமாற்றம் செய்திட ஏற்படும் செலவினை, காவல் துறை அல்லது அவர்களது தன்னார்வலர்களின் பங்களிப்பின் பேரில் மாநகராட்சிக்கு செலுத்த காவல்துறை சார்பில் ஒரு உறுதிமொழி தரப்பட்டுள்ளது.

தொடர்ச்சி...

காவல் துறைக்கு பள்ளப்பட்டி காவல் நிலையம், புதிய பஸ் நிலையம் வளாகத்திற்குள் அமைந்திட நிரந்தரமாக செயல்படும் நோக்கங்களுக்காக நகர நில அளவை வார்டு – L. பிளாக் 10, T.S.No.1 பரப்பளவு 9.96.00 ஹெக்டேர் நிலத்தில் பூமாலை வணிக வளாகத்தின் கிழபுறம் அமைந்துள்ள சூரமங்கலம் நகரசார் ஆய்வாளர் அவர்களின் தற்போதைய நில அளவையின் படி 0.19 ஏக்கர் (8272 ச.அ) நிலத்தினை அரசுக்கு திரும்ப ஒப்படைக்க மாநகராட்சி நிர்வாகம் முடிவு செய்து அதன்படி மாநகராட்சி நிர்வாகத்திலிருந்து விடுவித்து வருவாய்த்துறை நிர்வாகத்திற்கு ஒப்படைத்து இதன் மூலம் சுவாதீனம் வழங்கப்படுகிறது. எனவே மேற்கொள்ளப்பட்ட பணிகள் குறித்து மன்றத்தின் பின்னேற்பு வேண்டப்படுகிறது.

**சிறப்பு நிபந்தனைகள்**

- காவல் துறைக்கு நில ஒதுக்கீடு நிலத்தில் நிறுவியுள்ள ஜெனரேட்டரை வேறு பகுதிக்கு இடமாற்றம் செய்திட ஏற்படும் முழு செலவினத்தினையும் காவல் துறையே ஏற்க வேண்டும்.
- பூமாலை வணிக வளாகத்தின் பராமரிப்பில் உள்ள காலியிடத்தில் ஜெனரேட்டர் மாற்றி அமைத்துக்கொள்ள மாவட்ட ஆட்சியரிடம் மேற்படி இடத்திற்கான அனுமதி பெற நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

**<u>அலுவலகக் குறிப்பு:–</u>**

பின்னேற்பு வழங்கலாம்.

(இ9/ 13313/2024)

தீர்மானம். அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**12)** கோம்புரான்காடு தனிக்குடிநீர் திட்டத்தின்கீழ் செயல்பட்டு வரும் நீரேற்று நிலையத்தில் உள்ள VFD Panel அறையினில் 3x3 டன் எடை கொண்ட Air Conditioning வசதியினை ஏற்படுத்தும் பணியினை ரூ.4.10/– இலட்சத்தில் மேற்கொள்ள தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி சட்டம் பிரிவு எண்–57(7)ன் கீழ் 04.04.2024ம் தேதியில் ஆணையாளர் அவர்களின் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

மேற்படி பணிக்கு 10.04.2024 அன்று பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் விலைப்புள்ளிதாரர் M/s. Swethalakshmi Engineering, Salem. நிறுவனத்தாரிடமிருந்து ரூ.3,35,685/– என மதிப்பீட்டை விட 0.79% குறைவாக வரப்பெற்ற குறைந்த விலைப்புள்ளியை ஏற்றுக்கொண்டு 02.05.2024ஆம் தேதியில் பணி ஆணை வழங்கப்பட்டது.

பொது மக்களுக்கு வழங்கப்படும் குடிநீர் என்பதனால் அவசரம் மற்றும் அவசியம் கருதி, பணி ஆணை வழங்கி பணியை நிறைவேற்ற எடுக்கப்பட்ட நடவடிக்கையை மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:–**

1. பதிவு செய்யலாம்.
2. இதற்கான செலவினத்தை 2023–2024ஆம் ஆண்டு குடிநீர் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளலாம்.

**(இ2/ம.எண்.22/குநீ/2023–24)**

தீர்மானம். அலுவலகக்குறிப்பு 1, 2 அனுமதிக்கப்பட்டது.

(ஒம்) ஆ. இராமச்சந்திரன்
மேயர்
சேலம் மாநகராட்சி.

**சேலம்–1.**
**26–07–2024.**